[5th November 1966

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** அந்தப் பயிற்சிக் கல்லூரிகள் அமைப்பது எந்தெந்த இடத்திலே என்று அறியலாமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தனிக் கேள்வி வேண்டும். இப்பொழுது எந்த விதமான முடிவும் எடுத்துக்கொள்ளப்பட வில்லை.

* 426 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government propose to implement the U.G.C. scale of pay for the College and University teachers in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government of India have announced revised scales of pay for the University and College teachers for the Fourth Five-Year Plan period. The question of implementing the scales of pay is under examination.

**திரு. வை. சங்கரன் :** இப்போதுள்ள விகிதாசாரத்திற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ள விகிதாசாரத்திற்கும் உள்ள தாரதம்மியம், வேறுபாடு என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

* 427 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that there is no Women's College in Madras City with provision for studying 'Commerce' in the pre-university course for the successful girl students with Secretarial Course in the S.S.L.C. Class?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes.

**திரு. வை. சங்கரன் :** இன்றைக்குப் பெண்கள், ஹைஸ்கூலில் செகரடேரியல் கோர்ஸ் எடுத்துப் படித்தவர்கள் கல்லூரியில் வாணிபப் பிரிவில் சேர வேண்டுமென்றால் அதற்கு இடம் இல்லாத நிலையில் கஷ்டப்படுவதால் பெண்கள் கல்லூரியில் அந்தப் பிரிவைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தனிப்பட்ட கல்லூரிகளும் இருக்கின்றன ; அரசாங்கத்தின் கல்லூரிகளும் இருக்கின்றன. இது வரை இந்த மாதிரி மாணவிகள் கோருகிறார்கள் என்ற தகவல் வர வில்லை. தகவல் வந்தால் கவனிக்கலாம். தனிப்பட்ட கல்லூரிகளும் அனுமதி கோரலாம்.

**திரு. சா. கணேசன் :** தனிப்பட்ட கல்லூரிகள் இந்தப் பிரிவைத் துவக்க அனுமதி கோரலாம் என்று கனம் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சர்க்கார் நடத்துகிற பள்ளிகளில் இந்தப் பிரிவை வைத்து விட்டால் விண்ணப்பிக்கிறவர்களுக்குச் சுலபமாக